AL/2021(2022)/51/T-I

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021(2022)

චිත්‍ර කලාව I
சித்திரக்கலை I
Art I

**51 T I**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**சுட்டெண் :** ...................................

**அறிவுறுத்தல்கள்:**

※ இவ்வினாத்தாள் **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.

**பகுதி I**
- எல்லா **வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே** விடையளிக்குக.
- ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை** எதிரே உள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

**பகுதி II**
- மூன்று உப பகுதிகளைக் கொண்டது.
- **'அ'** பகுதியிலிருந்து எவையேனும் **இரண்டு** வினாக்களையும் **'ஆ', 'இ'** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **ஒரு** வினா வீதமும் தெரிவுசெய்து **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

※ பகுதி **I**, பகுதி **I** ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கையளிக்குக.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| **வினாத்தாள் I** | |
| **பகுதி** | **புள்ளி** |
| I | |
| II | |
| **மொத்தம்** | |
| 1 ஆம் பரீட்சகர் | 2 ஆம் பரீட்சகர் |
| | |

tamilguru.lk

## பகுதி I

● **1** தொடக்கம் **5** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகச் சரியான விடையைத்** தெரிவுசெய்க.

**1.** 'சங்கநிதி', 'பதுமநிதி' ஆகிய உருவங்களைக் கொண்ட காவற்கற் சோடியைக் காணக்கிடைப்பது,
(1) தூபாராமவில் ஆகும்.
(2) லங்காராமயவில் ஆகும்.
(3) அபயகிரிய தூபியில் ஆகும்.
(4) மெதிரிகிரிய வட்டதாகேயில் ஆகும்.
(5) லங்காதிலக சிலைமனையில் ஆகும். (.........)

**2.** சிந்துவெளி நாகரிகத்தில் கிடைக்கப்பெற்ற கலைப் படைப்புகளில் இயற்கையுடன் மிக நெருங்கிய உரு
(1) சிவ பசுபதி
(2) முண்டப் படிமை
(3) நடனமாது உருவம்
(4) யோகி உருவம்
(5) தாய் தேவதை (.........)


**3.** தம்புள்ளை குகைக் கோயில்;
(1) கண்டிக்கால சுவரோவியங்கள் பலவற்றைக் கொண்ட இடமாகும்.
(2) கடோல்கல்ல ஓவியப் பரம்பரையினரால் வரையப்பட்ட ஓவியங்களைக் கொண்ட இடமாகும்.
(3) அனுராதபுர காலம் தொடக்கம் கண்டிக் காலம் வரையில் ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்டதாகும்.
(4) நீலகம ஓவியப் பரம்பரையினரால் வரையப்பட்ட சுவரோவியங்களைக் காணக்கிடைக்கும் ஓர் இடமாகும்.
(5) பல ஜாதகக் கதைகள் ஓவியமாக்கப்பட்டுள்ள ஓர் இடமாகும். (.........)


[பக் 2 ஐப் பார்க்க

**4.** எகிப்தின் புதிய இராசதானிக் காலத்தில்,
(1) பிரமிட்டுக்களுக்குப் பதிலாக தேவாலய நிர்மாணிப்பில் ஆர்வம் காட்டப்பட்டது.
(2) அதிகளவான பிரமிட்டுக்கள் நைல் நதிக் கரையில் நிர்மாணிக்கப்பட்டன.
(3) பேரளவிலான பல பிரமிட்டுக்கள் நிர்மாணிக்கப்பட்டன.
(4) பாரா அரசர்களின் லௌகீக வாழ்க்கைக்காக மாளிகைகள் அமைக்கப்பட்டன.
(5) பேரளவிலான பிரமிட்டுக்களுக்குப் பதிலாக சிறியளவிலான பிரமிட்டுக்கள் நிர்மாணிக்கப்பட்டன. (.........)


**5.** கிரேக்க தொல்சீர் யுகத்துக்குரிய சிலை
(1) வீனஸ் டி மெலோ
(2) லவக்கூன்
(3) வெற்றித் தேவதை
(4) இறக்கும் கலாத்தியன்
(5) ஹர்மீசும் டயோனீசியசும் (.........)


● **6** தொடக்கம் **10** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை, 1** தொடக்கம் **7** வரையில் இலக்கமிடப்பட்டுள்ள பின்வரும் கட்டடக்கலை நிர்மாணிப்புகளிலிருந்து தெரிவுசெய்க.



1



2


3


4


5


6


7

**6.** இவற்றுள் பௌத்த சமய நிர்மாணிப்புகளாகக் கருதத்தக்கவை
(1) **1, 2, 5** (2) **1, 3, 4** (3) **2, 4, 5** (4) **3, 5,7** (5) **4, 5, 7** (.........)

**7.** இவற்றுள் இந்தியாவில் அமைந்துள்ள நிர்மாணிப்புகளாவன
(1) **1, 4** (2) **4, 5** (3) **4, 6** (4) **4, 7** (5) **6, 7** (.........)

**8.** இவற்றுள் இந்தியக் கலைப்பண்புகள் சிறப்பாக வெளிப்படும் படைப்புக்களாவன
(1) **1, 2, 5, 6** (2) **1, 4, 5, 7** (3) **1, 5, 6, 7** (4) **2, 3, 4, 5** (5) **2,3,5,7** (.........)

**9.** இவற்றுள் சமயச் சார்பற்ற நிர்மாணிப்புக்களாகக் குறிப்பிடத்தக்கன
(1) **2, 3, 6** (2) **3, 4, 5** (3) **3, 4, 6** (4) **3,6,7** (5) **4, 6, 7** (.........)

**10.** இவற்றுள் பொலன்னறுவைக் காலத்திற்குரிய நிர்மாணிப்புகளாவன
(1) **1, 2, 6** (2) **1, 5, 6** (3) **1, 6, 7** (4) **2, 3, 5** (5) **4, 5, 6** (.........)

[பக் 3 ஐப் பார்க்க

● **11** தொடக்கம் **15** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை A, B, C, D, E** எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் ஓவியங்களிலிருந்து தெரிவுசெய்க.



A




B



C



D



E

**11.** **A** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள 'இந்திராணி' என்ற ஓவியம்,
(1) அமரசேகர முதலியாரின் சாஸ்திராலய யதார்த்தவாத நிர்மாணிப்பாகும்.
(2) ஸ்டான்லி அபேசிங்கவின் நவீனவாதத்திற்குரிய பெண் பிரதிமை ஓவியமாகும்.
(3) ஹரி பீரிஸின் வெளிப்பாட்டுப் பண்புகளைக் கொண்ட பிரதிமை ஓவியமாகும்.
(4) ஐவன் பீரிஸின் நவீனவாதத்திற்குரிய பெண் உருவமாகும்.
(5) ஜே. டீ. ஏ. பெரேராவின் இயற்கைவாதப் படைப்பாகும். (.........)

**12.** **B** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ராஜாரவிவர்மாவின் சரஸ்வதி என்ற ஓவியத்தின் மூலம்,
(1) ஐரோப்பிய நவீன கலைநுட்பங்களின் ஊடாக இந்திய கருப்பொருளொன்று சித்திரிக்கப்பட்டுள்ளது.
(2) அங்லோ - இந்திய மரபை மீறி இறைபக்தி சித்திரிக்கப்பட்டுள்ளது.
(3) ஐரோப்பிய அதியதார்த்தவாத கலைநுட்பத்துக்கமைய இந்து சமய பக்திக் கதையொன்றில் வரும் பாத்திரமொன்று சித்திரிக்கப்பட்டுள்ளது.
(4) ஐரோப்பிய நவீனவாத கலைப் பண்புகளைக் கொண்டதாக இந்திய புராண கதையொன்று சித்திரிக்கப்பட்டுள்ளது.
(5) ஐரோப்பிய சாஸ்திராலய யதார்த்தவாதக் கலைப் பண்புகளுக்கமைய வரையப்பட்ட இந்து சமய தேவதை உருவமொன்று சித்திரிக்கப்பட்டுள்ளது. (.........)

**13.** **C** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள, எல். டீ. பீ. மஞ்சுஸ்ரீயினால் வரையப்பட்ட ஓவியம்,
(1) நீர்ச்சாய ஊடகத்தினால், பெண் உடலின் நலினத்தை யதார்த்தபூர்வமாகக் காட்டுவதற்கு எடுக்கப்பட்டதொரு முயற்சியாகும்.
(2) கலைப்பாங்கான பண்புகளை அதியுயர் வெளிப்பாட்டுடன் சித்திரிக்கும் விதத்தில் வரையப்பட்டதாகும்.
(3) நவீன ஐரோப்பிய கலைநுட்பங்களினதும் கீழைத்தேய கலைப் பாணிகளினதும் ஒருங்கிணைப்பாகும்.
(4) சாஸ்திராலய யதார்த்தவாத கலைப் பண்புகளை எடுத்துக்காட்டுவதாகும்.
(5) எண்ணெய் வர்ண ஊடகப் பயன்பாட்டினால் புதிய மனப்பதிவுவாத கலைநுட்பங்களுக்கமைய வரையப்பட்டதாகும். (.........)

**14.** **D** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள 'கண்ணாடி முன் பெண்' என்ற ஓவியமானது,
(1) மரபுரீதியான ஓவியப்பாணியொன்று அவ்வாறே பின்பற்றப்பட்டுள்ளமையாகும்.
(2) குறியீட்டுப் பாணியில் முன்வைக்கப்பட்ட கட்புல வெளிப்பாடாகும்.
(3) இயற்பண்பினை கலைத்துவரீதியான வெளிப்பாடாக மாற்றியுள்ளமையாகும்.
(4) பகுதியளவு அரூபவாதத்தைக் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்ட பெண் உருவமாகும்.
(5) கலைப்பாங்கான விதத்தில் பெண் உருவம் ஓவியமாக்கப்பட்டுள்ளமையாகும். (.........)

**15.** **E** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள மொன்றியனின் ஓவியம்,
(1) நிலைக்குத்து, கிடைக் கோடுகளால் உருவாக்கப்படும் வடிவங்களின் இணைப்பாகும்.
(2) மோதலொன்றைப் போன்று ஒருங்கிணைப்பும் வெளிப்படும் விதத்தில் பல்வேறு வர்ணச்சதுரங்கள் வரையப்பட்டுள்ளமையாகும்.
(3) கோடுகள், வர்ணங்கள், வெளிகளின் பயன்பாட்டின் மூலம் வர்ணங்களின் ஆழம் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையாகும்.
(4) சதுர வடிவ மாதிரிகளின் மூலம் கட்டியெழுப்பப்பட்ட கருதுகோள்ரீதியான ஒருங்கிணைப்பாகும்.
(5) எளிமையான கோடுகள், சதுர வடிவங்களின் மூலம் கித்தான் (கன்வஸ்) மீது செய்யப்பட்டதோர் ஒருங்கிணைப்பாகும். (.........)

● **16** தொடக்கம் **20** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை, F, G, H, I, J** எனப் பெயரிடப்பட்டுள்ள செதுக்கல்களைக் கொண்ட பின்வரும் படங்களிலிருந்து தெரிவுசெய்க.


F


G


H


I


J

**16. F** எழுத்தினால் காட்டப்பட்ட இச்செதுக்கல்,
(1) ஆண் உருவத்தின் மகிழ்வையும் பெண் உருவத்தின் சோகத்தையும் காட்டுவதற்கு எடுக்கப்பட்டதொரு முயற்சியாகும்.
(2) செதுக்கல் நுட்பமுறைகளைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட தெய்வீகமான வெளிப்பாடாகும்.
(3) அரச பண்புகள் வெளிப்படும் விதத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்லவர்களின் கலைப் பண்புகளைக் கொண்ட கற்றகடாகும்.
(4) குப்தர்களின் கலைப் பண்புகளைக் கொண்ட உணர்வுபூர்வமானதும் நேர்த்தியானதுமான வெளிப்பாடாகும்.
(5) மனித உருவங்கள் இரண்டை ஒன்றிணைத்துச் செய்யப்பட்ட சிருங்காரமானதொரு வெளிப்பாடாகும். (.........)

**17. G** எழுத்தினால் கட்டப்பட்டுள்ள மரத்தாலான சட்டகச் செதுக்கல்,
(1) எம்பக்க தேவாலயத்திலுள்ள, தாய்ப்பாசத்தை வெளிப்படுத்தும் செதுக்கலாகும்.
(2) பனாவிட்டிய அம்பலத்தில் காணத்தக்க, சாதாரண மனித வாழ்வு சித்திரிக்கப்படும் சந்தர்ப்பமாகும்.
(3) கண்டி மகுல்மடுவயிலுள்ள, அரச குடும்பம் ஒன்று காட்டப்படும் செதுக்கலாகும்.
(4) எம்பக்க தேவாலயத்தில் காணக்கிடைக்கும், கடவுள் கதையொன்றை கருப்பொருளாகக் கொண்டதொரு சந்தர்ப்பமாகும்.
(5) பனாவிட்டிய அம்பலத்திலுள்ள, உன்னத பெண்மணி ஒருவரும் அவரது சேவகி ஒருவரும் காட்டப்பட்டுள்ள செதுக்கலாகும். (.........)

**18. H** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள பாரூத் எச்சங்களில் இருந்து கிடைக்கப்பெற்றுள்ள இச்செதுக்கல்,
(1) பல சம்பவங்களை ஒரே சட்டகத்தில் எளிய புடைப்பில் ஒருங்கிணைத்த சந்தர்ப்பமாகும்.
(2) ஜாதகக்கதை ஒன்றை தொனிப்பொருளாகக் கொண்ட அரை புடைப்புச் சட்டகமாகும்.
(3) புத்தரின் வாழ்வுடன் தொடர்புடைய பிரபல்யமானதொரு சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.
(4) கல்வேலியின் அலங்கார அங்கமாகச் செதுக்கப்பட்ட சமகாலச் சம்பவமொன்றாகும்.
(5) தொடர்ச்சியான கதைகூறும் முறையில் நிர்மாணிக்கப்பட்ட எளிய புடைப்பு கற்றகட்டுச் செதுக்கலாகும். (.........)

**19. I** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள செதுக்கல்,
(1) புத்த பகவானின் வாழ்க்கையுடன் தொடர்புடைய புராணக் கதையொன்று சித்திரிக்கப்படுவதாகும்.
(2) சித்தார்த்தன் பூங்காவில் விளையாடுவதற்காகச் செல்லும் சந்தர்ப்பத்தை எடுத்துக்காட்டுவதாகும்.
(3) அமராவதி பிரதேசத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அரச ஊர்வலமொன்று (பெரஹரா) காட்டப்பட்டுள்ளமையாகும்.
(4) சித்தார்த்தர் 'இல்லறத்தைத் துறத்தலைச் (அபினிஸ்க்ரமணய) சித்திரிப்பதாகும்.
(5) போர்க்களத்துக்குச் செல்லும் குதிரை வீரன் ஒருவனைச் சித்திரிப்பதாகும். (.........)

**20. J** எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது,
(1) மென்குரே அரசன் எதிரிகளுடன் யுத்தம் செய்கின்றமையைக் காட்டுகின்ற செதுக்கலாகும்.
(2) பாரா அரசர்களின் போர்க் காட்சிகளை உள்ளடக்கிய பளிங்கிலான கற்றகடாகும்.
(3) கோரஸ் கடவுளுடன் செய்யப்படுகின்ற யுத்தக் காட்சிகளை உள்ளடக்கிய செதுக்கலாகும்.
(4) காப்ரோ அரசனின் வாழ்க்கைத் தகவல்களை உள்ளடக்கிய செதுக்கல் கற்றகடாகும்.
(5) நாமர் அரசனின் போர் வெற்றிகள் குறியீட்டுப் பாணியில் காட்டப்படுகின்ற செதுக்கல் கற்றகடாகும். (.........)

● **21** தொடக்கம் **25** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையை, **K, L, M, N, O** எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் கலைப்படைப்புக்களிலிருந்து தெரிவுசெய்க.


K


L


M


N


O

**21.** **K** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள, கல்விகாரையின் சமாதி புத்தர்சிலை,
(1) பல்லவர்களின் செல்வாக்குடன் நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(2) மகாயான எண்ணக்கருவுக்கமைய உருவாக்கப்பட்டதாகும்.
(3) அமராவதி பாணியில் நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(4) மதுரா கலை மரபுக்கமைய நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(5) குப்த செல்வாக்குடன் நிர்மாணிக்கப்பட்டதாகும். (.........)

**22.** **L** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள, அர்த்தநாரீஸ்வரர் சிலை,
(1) பொலன்னறுவைக் காலத்தில் கிடைக்கப்பெற்ற உலோக வார்ப்புச் சிலையாகும்.
(2) இடது அரைப்பாகம் பெண் தன்மையினதாக நிர்மாணிக்கப்பட்டதொரு சிலையாகும்.
(3) பெண் உருவின் வனப்பை வெளிப்படுத்தும் சிலையாகும்.
(4) பெண், ஆணைவிட பலம் பொருந்தியவள் என்பதைச் சித்திரிக்கும் படைப்பாகும்.
(5) அபயகிரி விகாரை வளாகத்தில் கிடைக்கப்பெற்ற வெண்கலச் சிலையாகும். (.........)

**23.** **M** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள, காந்தாரத்தில் கிடைக்கப்பெற்ற பிரேகம் சிலை,
(1) ஓரளவு அதிசயிக்கத்தக்கதாகச் சித்திரிக்கப்படும் சிலையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.
(2) சிறந்த பூரணத்துவத்தையும் சுருக்கங்களைக் கொண்ட காவியுடையையும் கொண்டதாகும்.
(3) அபய முத்திரை சித்திரிக்கப்படும் புத்தர் சிலையாகக் கருதப்படுகிறது.
(4) இந்திய கலைப் பண்புகளை வெளிப்படுத்துவதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.
(5) சரியான அளவிடைக்கமைய நிர்மாணிக்கப்பட்ட சிலையாகும். (.........)

**24.** **N** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிலை,
(1) சோழர்களின் மரபுக்குரிய கோயில் ஒன்றின் வெளிச்சுவரிலுள்ள சிவ பிச்சாதனர் உருவமாகும்.
(2) ஆல மரத்தடியில் ராஜ கம்பீரத்துடன் அமர்ந்திருக்கும் கல்யாண சுந்தரர் சிலையாகும்.
(3) ராஜ ராஜேஸ்வரர் கோயிலின் இடது பக்க மனை ஒன்றில் செதுக்கப்பட்டுள்ள சிவபெருமானின் உருவமாகும்.
(4) எல்லாம் வல்ல குருவின் தன்மையில் வீற்றிருக்கும் சிவதட்சிணாமூர்த்தி உருவமாகும்.
(5) கலைப்பாங்குடன் செதுக்கப்பட்டுள்ள, விஷ்ணுவின் உருவத்தைக் கொண்ட கோபுரச் செதுக்கல் ஆகும். (.........)

**25.** **O** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள 'சிந்திக்கும் மனிதன்' என்ற சிலையின் மூலம் ரொடின் முயற்சி செய்துள்ளமை,
(1) மனித உடலின் உறுதியான தன்மையை மென்மையாக சிலையாக்குவதற்காகும்.
(2) உணர்வுகளை வெளிப்படுத்துவதற்காக முழுமையான மனித உருவின் தேவையை எடுத்துக்காட்டுவதற்காகும்.
(3) நிறைவற்ற பூரணத்துவம் கூட கலைத்துவக் கோட்பாடாகும் என்பதனை உறுதிப்படுத்துவதற்காகும்.
(4) விரக்தியுற்றமை காரணமாக ஏற்பட்ட மன உழைச்சலை வலுவான உடற்பண்புகளைக் கொண்டதாகக் காட்டுவதற்காகும்.
(5) ஆழமான உணர்வு வெளிப்பாட்டுக்காக நிர்வாணமான மனித உடலைப் பயன்படுத்தலாம் என்பதைக் காட்டுவதற்காகும். (.........)

[பக் 6 ஐப் பார்க்க

● **26** தொடக்கம் **30** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையைத்** தெரிவுசெய்க.

**26.** தற்காலத்தில் 'கட்புலக் கலை' என்பதனால் கருதப்படுவது,
(1) கண்ணை அடிப்படையாகக் கொண்டு பார்க்கச் செய்கின்ற நிர்மாணிப்புகளாகும்.
(2) பொருள்களை ஊடகமாகக் கொண்டு கட்டியெழுப்பி செய்யப்படுகின்ற நிர்மாணிப்புகளாகும்.
(3) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து நிலவி வந்த ஓவியக் கலையாகும்.
(4) வர்ண ஊடகத்தினால் செய்யப்படுகின்ற, கண்கவர் வெளிப்பாடாகும்.
(5) ஓவியங்கள், சிலைகள், கட்டடக்கலை போன்ற கலைக் கூறுகளின் சேர்க்கையாகும். (.........)

**27.** வர்த்தகரீதியான கிறபிக் நிர்மாணிப்புகளின் முக்கிய குறிக்கோளாக அமைவது,
(1) உற்பத்திப்பொருட்களை விற்பனை செய்யும்போது அதிக நன்மைகளை வழங்குதலாகும்.
(2) அச்சிடற் பணிகளை மிக வினைத்திறனாகவும் முறையாகவும் செய்துகொள்ள முடியுமானதாக இருத்தலாகும்.
(3) உற்பத்திப் பெயர் சிறப்பாக வெளிப்படுத்தப்படும் விதத்தில் தொடர்பாடல் செய்தலாகும்.
(4) உற்பத்தி, சேவைகள் தொடர்பாக நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்பாடல் செய்வதற்காகும்.
(5) உற்பத்திக்குத் தேவையான சுட்டுத்துண்டு (Label), சுற்றுறை அகியவற்றைத் தயாரித்துக் கொள்வதற்காகும். (.........)


**28.** மொகலாய ஓவியக்கலை,
(1) ஜஹாங்கீரினால் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட சிறியளவிலான ஓவிய மரபாகும்.
(2) அவுரங்கசீப்பினால் இந்தியா முழுவதும் பரப்பப்பட்டதாகும்.
(3) பர்சிய செல்வாக்கின் மூலம் இஸ்லாமிய ஆட்சியாளர்களால் பிரபல்யப்படுத்தப்பட்டதாகும்.
(4) இந்திய இலக்கிய சம்பவங்களைச் சித்திரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட ஓவிய மரபாகும்.
(5) இஸ்லாமியர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட சமய சார்பான ஓவிய மரபாகும். (.........)

**29.** கனவடிவவாதக் கலைஞர்களின் நோக்கமாக அமைந்தது,
(1) பொருள் ஒன்றைப் பார்க்கும் கோணத்தை மாற்றியமைத்தலாகும்.
(2) கட்புல நோக்கங்களை அதேவிதமாகப் பின்பற்றுதலாகும்.
(3) யதார்த்தவாதமற்ற கலைப்பாங்கான விதிமுறைகளைப் பின்பற்றுதலாகும்.
(4) பொருட்களை, கேத்திர கணித வடிவங்களைப் பயன்படுத்தி பகுத்தாய்தலாகும்.
(5) இயற்கையிலுள்ள பொருட்களை அசையா தன்மையினதாகக் காட்டுதலாகும். (.........)

**30.** எகிப்திய கட்டடக் கலைக்கு அடிப்படையாக அமைந்தது,
(1) பாரா அரசர்களுக்காக லௌகீகக் கட்டடங்களை அமைக்க வேண்டிய தேவைப்பாடாகும்.
(2) மரணத்தின் பின்னரான வாழ்வின் நிலவுகைக்கான நம்பிக்கை முறைமையாகும்.
(3) இறந்தவர்களின் உடல்களை நிலையாகப் பேணி வைக்க வேண்டிய தேவைப்பாடாகும்.
(4) பாரா அரசர்களின் வீரபராக்கிரமங்களைக் காட்டுவதற்கு எடுக்கப்பட்டதோர் முயற்சியாகும்.
(5) பாரா அரசர்களின் வாழ்க்கை தொடர்பான நினைவுச் சின்னங்களை நிறுவும் தேவையாகும். (.........)


● **31** தொடக்கம் **35** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை** அதற்கு முன்னாலுள்ள கட்டடக்கலை நிர்மாணிப்புகளை அடிப்படையாகக் கொண்டு தெரிவுசெய்க.

**31.** கற்சுவரினால் சூழப்பட்ட இந்த போதிகர அமைந்துள்ளது,



(1) பண்டுவஸ்நுவரயில் ஆகும்.
(2) படிகெம்கலயில் ஆகும்.
(3) நில்லக்கமயில் ஆகும்.
(4) ஹத்திகுச்சி விகாரையில் ஆகும்.
(5) லாகுகல மகுல்மடு விகாரையில் ஆகும். (.........)


**32.** அனுராதபுரக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட இக்கட்டடம்,



(1) மகாமெவுனா பூங்காவில் அமைந்துள்ள உபோசதகர ஆகும்.
(2) கற்றூண்களின் தொகுதி ஒன்றின் மீது நிர்மாணிக்கப்பட்ட மாளிகையாகும்.
(3) துட்டகைமுனு மன்னனால் நிர்மாணிக்கப்பட்டதொரு கூட மண்டபமாகும்.
(4) கற்றூண்களின் மீது அமைக்கப்பட்ட அரச மாளிகை ஆகும்.
(5) பிக்குகளுக்காக நிர்மாணிக்கப்பட்ட ஒன்பது மாடிகளைக் கொண்ட மாளிகை ஆகும். (.........)

[பக் 7 ஐப் பார்க்க


**33.** தற்போது சிதைவுகளாக எஞ்சியுள்ள இக்கட்டடக்கலை நிர்மாணிப்பு,



(1) அனுராதபுரத்தின் விஜயபாகு அரச மாளிகையாகும்.
(2) பொலன்னறுவையின் விஜயபாகு அரச மாளிகையாகும்.
(3) பராக்கிரம சமுத்திரத்திற்கு அருகில் அமைந்துள்ள நிஸ்ஸங்கமல்லன் அரச மாளிகையாகும்.
(4) பொலன்னறுவை லங்காதிலக சிலைமனையாகும்.
(5) பராக்கிரமபாகு மன்னனின் அரச சபையான விஜயோத்பாய ஆகும்.

(.........)


**34.** இந்த தாஜ்மஹால் கட்டடம்,



(1) மொகலாய ஆட்சிக்காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட மாளிகையாகும்.
(2) ஆக்ரா நகரில் நிர்மாணிக்கப்பட்ட சமய நினைவுச் சின்னமாகும்.
(3) மொகலாயர்களின் காலத்தில் வெண்பளிங்குக் கற்களினால் நிர்மாணிக்கப்பட்ட மாளிகை ஆகும்.
(4) ஹுமாயன் அரசனை நினைவுகூர்வதற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டடமாகும்.
(5) கோளவடிவ சிகரத்தைக் கொண்ட இஸ்லாமிய மாளிகை ஆகும்.

(.........)

**35.** தற்போது சிதைவுகளுக்குட்பட்டுக் காணப்படும் இந்த கொலோசியம் கட்டடம்,



(1) திறந்த வெளியரங்கு பற்றிய எண்ணக்கருவின் ஆரம்ப நிலையாகும்.
(2) கிரேக்க பாரம்பரிய கட்டடக்கலை மாதிரிக்கமைய நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(3) உரோமர்களின் அதிகார பலத்தினை வெளிப்படுத்தும் அரச கட்டடமாகும்.
(4) உரோமர்களின் யுத்த வெற்றிகளை நினைவூட்டும் மிகப்பெரிய நிர்மாணிப்பாகும்.
(5) உரோம நகரில் நிர்மாணிக்கப்பட்ட நீள்வட்ட வடிவான அமைப்பைக் கொண்ட திரையரங்காகும்.

(.........)

- **36** தொடக்கம் **40** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகச் சரியான விடையை,** பின்வரும் ஓவியத்தைப் பயன்படுத்தி தெரிவுசெய்க.



**36.** இந்த ஓவியத்தைக் காணக்கிடைப்பது,

(1) தெல்வத்த ரஜமகாவிகாரையில் ஆகும்.
(2) தம்புள்ளை குகை விகாரையில் ஆகும்.
(3) கத்தலுவ பூர்வாராமயவில் ஆகும்.
(4) முல்கிரிகல ரஜமகா விகாரையில் ஆகும்.
(5) கரகம்பிட்டி சுபோதாராமயவில் ஆகும்.

(.........)

**37.** இந்த ஓவியத்தின் கருப்பொருளாய் அமைந்தது,

(1) பௌத்த மத ஊர்வலம் (பெரஹரா) ஒன்றின் காட்சியாகும்.
(2) நடனமாடும், பாடல்களை இசைக்கும் கலைஞர்களாவர்.
(3) தேலபத்த ஜாதகக் கதையில் வரும் ஒரு சந்தர்ப்பமாகும்.
(4) வெஸ்ஸந்தர ஜாதகக் கதையிலுள்ள ஒரு சம்பவமாகும்.
(5) விகாரையொன்றில் பூஜை நடாத்தப்படும் விதமாகும். (………)

**38.** இந்த ஓவியத்தின் பாணிக்கமைய அது உரித்தாவது,

(1) பொலன்னறுவை காலத்தின் இறுதியில் அழிவுற்ற ஓவிய மரபொன்றிற்காகும்.
(2) பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உருவான தாழ்நாட்டு ஓவிய மரபிற்காகும்.
(3) கண்டி ராசதானி வீழ்ச்சியுற்றதன் பின்னர் உருவான கிராமியக் கலை மரபிற்காகும்.
(4) பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் உருவான மத்திய கண்டி மரபிற்காகும்.
(5) கண்டி ராசதானி காலத்தில் நிலவிய பிரதேசரீதியானதொரு பாணிக்காகும். (………)

**39.** இந்த ஓவியத்தில்,

(1) அசைவு நிலைகளை, மரபுரீதியான பண்புகளுக்கமைய தளத்தின் மீது ஒன்றிணைப்பதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளது.
(2) உருவங்களை ஒன்றுடனொன்று இணைக்கும்போது அசைவும் செயற்பாங்கும் மிகச் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளது.
(3) ஒருங்கிணைப்பு உபாயமாக பெண்களின் உருவங்கள் வட்ட வடிவ மாதிரியில் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.
(4) தாள ஓட்டத்துக்கமைவான தன்மையின் மூலம் ஒருங்கிணைப்பின் உயிர்ப்பான பண்பு மிக நேர்த்தியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
(5) பக்கத் தோற்றங்களைக் கொண்ட மனித உருவங்கள் கட்டுப்பாட்டுடன் தளத்தின் மீது பயன்படுத்தப்பட்டுள்ளன. (………)

**40.** இந்த ஓவியத்தில் வெளிப்படும் சிறப்பம்சமாக அமைவது,

(1) இளமையின் அழகியல் தன்மை சிறப்பாக ஓவிய மொழியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையாகும்.
(2) ஒலி நயத்தைக் கவர்வதனை விளைவாக காட்டுவதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளமையாகும்.
(3) நடனமாதர்களின் சுறுசுறுப்பான நிலைகளின் உயிர்ப்பான பண்பு காட்டப்பட்டுள்ளமையாகும்.
(4) நடனமாடும், இசைக் கருவிகளை இசைக்கும் சுறுசுறுப்பான நிலைகளின் மூலம் வியத்தகு சந்தர்ப்பமொன்று சித்திரிக்கப்பட்டுள்ளமையாகும்.
(5) நலினமான பெண் உருவங்களின் உயிர்ப்பான தன்மையை எடுத்துக்காட்டுவதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளமையாகும். (………)

* *

More Past Papers at
tamilguru.lk

[பக் 9 ஐப் பார்க்க

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021(2022)

චිත්‍ර කලාව I
**சித்திரக்கலை I**
Art I

51 T I

## பகுதி II

※ இப்பகுதி **மூன்று** உப பகுதிகளைக் கொண்டுள்ளது.

※ **'அ'** பகுதியிலிருந்து எவையேனும் **இரண்டு** வினாக்களையும் **'ஆ'**, **'இ'** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **ஒரு** வினா வீதமும் தெரிவுசெய்து **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

(தேவையான இடங்களில் பருமட்டிப் படங்களைப் பயன்படுத்துதல் உங்களுக்கு அனுகூலமாக அமையும்.)

### பகுதி - அ

### (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இலங்கை)

**1.** அனுராதபுரக் காலத்தில் நிலவிய சுவர் ஓவிய மரபு பொலன்னறுவைக்கால இறுதி வரையிலும் தொடர்ச்சியாக நிலவி வந்தமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன.

(i) ஹிந்தகலை குகை விகாரையின் பழைய சுவர் ஓவியங்களில் எஞ்சியிருந்த சுவரோவியப் பகுதிக்காகப் பயன்டுத்தப்பட்ட கருப்பொருள்கள் **இரண்டினதும்** பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) சிகிரியா சுவரோவியங்களில் பெண் உருவங்கள் பல்வகைமையைக் கொண்டதாக வரையப்பட்டுள்ள விதம் தொடர்பாக சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) பொலன்னறுவை திவங்க சிலைமனையின் பழைய ஓவியங்கள், மஹியங்கனை தாதுகர்ப்பத்தின் ஓவியங்கள் ஆகியவற்றை ஒப்பீட்டுரீதியில் மதிப்பிடுக. (08 புள்ளிகள்)

**2.** பொலன்னறுவைக் காலத்தில் பௌத்த சமய கட்டடங்களை நிர்மாணிக்கும்போது அதனுடன் இணைந்த இந்து சமய கட்டடக்கலைப் பண்புகள் கம்பளை, கண்டி காலங்களிலும் அவ்வாறே காணக்கிடைத்தன.

(i) பொலன்னறுவைக் காலத்தில் கெடிகே மரபுக்கமைய செங்கற்களினால் நிர்மாணிக்கப்பட்ட பௌத்த சமய கட்டடக்கலை நிர்மாணிப்புகள் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) இரண்டாம் சிவாலயத்தில் காணக்கிடைக்கும் இந்து சமய கட்டடக்கலைப் பண்புகளைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) கம்பளைக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட கடலாதெனிய விகாரையில் இந்து சமய கட்டடக்கலைப் பண்புகள் பௌத்த சமய முகத்தோற்றத்துடன் பயன்படுத்தப்பட்டுள்ள விதம் தொடர்பாக ஆராய்க. (08 புள்ளிகள்)

**3.** ஐரோப்பிய நவீன கலைப் போக்குகளை அடிப்படையாகக் கொண்டு, இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் உருவான, இலங்கையின் ஓவிய, சிலைக் கலைஞர்களால் சகாப்த சாதனைகள் படைக்கப்பட்டுள்ளன.

(i) நவீன சிலைக் கலையின் கலைநுட்பங்களைப் பயன்படுத்தி திஸ்ஸ ரணசிங்கவினால் நிர்மாணிக்கப்பட்ட சிலைகள் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) ஓவியர் ஸ்டான்லி அபேசிங்கவின் ஓவியப்பாணி தொடர்பாக அவரது படைப்புகளை அடிப்படையாகக் கொண்டு சுருக்கமாக மதிப்பிடுக. (05 புள்ளிகள்)

(iii) 43 ஆம் குழுவின் முதன்மை ஓவியரான ஐவன் பீரிஸின் 'திரும்பி வருதல்', 'கல்கிஸ்ஸ' ஆகிய ஓவியங்களை அடிப்படையாகக் கொண்டு, அவரது படைப்புகளில் வெளிப்படும் மேற்கத்திய நவீன ஓவியப் போக்குகள் பற்றி ஆராய்க. (08 புள்ளிகள்)

[பக் 10 ஐப் பார்க்க

## பகுதி - ஆ

## (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)

**4.** மௌரிய வம்சத்தைச் சேர்ந்த தர்மாசோக மன்னனின் ஆட்சிக்காலத்தில் தொடங்கிய பௌத்த கலை மரபு குப்தர் காலத்தின் இறுதி வரை நிலவியது.

(i) அசோகத் தூண்கள் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) சாஞ்சி தூபியின் கட்டடக்கலைப் பண்புகள் தொடர்பாக சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) "அஜந்தா சுவரோவியங்களில் தேரவாத, மகாயான மரபுகள் இரண்டிற்குமுரிய ஓவியங்கள் காணக்கிடைக்கின்றன." ஒப்பீட்டுரீதியில் ஆராய்க. (08 புள்ளிகள்)

**5.** இந்திய பௌத்த கலை மரபுகளில் சிலை நிர்மாணிப்புகளில் பல்வேறு வேறுபாடுகளைக் காணத்தக்கதாயுள்ளது.

(i) காந்தாரக் கலை மரபுக்கமைய நிர்மாணிக்கப்பட்ட **இரண்டு** சிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) மதுரா மரபுக்குரிய கத்ரா புத்தர் சிலை பற்றி சுருக்கமாக அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

(iii) குப்தர் காலத்துக்குரிய மதுரா புத்தர் சிலையிலும் சாராணாத் புத்தர் சிலையிலும் காணத்தக்க கலைப் பண்புகளை ஒப்பீட்டுரீதியில் பகுப்பாய்க. (08 புள்ளிகள்)

## பகுதி - இ

## (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)

**6.** 'அதியதார்த்தவாதம்' (surrealism) என்பது இருபதாம் நூற்றாண்டின் ஓவியக் கலையை புதியதோர் பாதைக்கு இட்டுச் சென்ற கலைப்போக்காகும்.

(i) அதியதார்த்தவாத ஓவியக் கலைஞர்கள் **இருவரின்** பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) அதியதார்த்தவாதக் கலையின் அடிப்படைப் பண்புகளைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) அதியதார்த்தவாதமானது யதார்த்தவாதக் கலையிலிருந்தும் அரூபவாதக் கலையிலிருந்தும் வேறுபடும் விதத்தை 'இறவாத ஞாபகம்' என்ற ஓவியத்தை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க. (08 புள்ளிகள்)

**7.** புராதன காலத்தில் பலம் வாய்ந்ததோர் இராச்சியமாக விளங்கிய எகிப்தின் கலைப் படைப்புகளில் அவர்களுக்கேயுரிய தனித்துவமான மரபுரீதியான பண்புகள் பரவலாகக் காணக்கிடைத்தன.

(i) மரபுரீதியான பண்புகளைக் கொண்ட எகிப்திய சிலைகள் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) எகிப்திய சிலைகளில் காணத்தக்க மரபுரீதியான பண்புகளைச் சுருக்கமாக விளக்குக.(05 புள்ளிகள்)

(iii) மரபுரீதியான எகிப்திய ஓவியக்கலைப் பண்புகளுக்கமைய 'நடனமாதுக்களும் இசைக்கலைஞர்களும்' என்ற ஓவியம் மிகச்சிறப்பானதோர் நிர்மாணிப்பாகும் என்பதனை 'பறவை வேட்டை' என்ற ஓவியத்துடன் ஒப்பிட்டு விளக்குக. (08 புள்ளிகள்)

❊ ❊ ❊

6008

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021(2022)

චිත්‍ර කලාව II
சித்திரக்கலை II
Art II

**51 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள பொருள் தொகுதியை நன்றாக விளங்கிக்கொள்வதற்கு மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

- உமது **சுட்டெண்ணைச்** சித்திரம் வரையும் தாளின் **மறுபக்கத்தில்** தெளிவாக எழுதுக.
- வர்ணச் சித்திரம் வரைவதற்காக உமக்கு வழங்கப்பட்டுள்ள விசேட **வரைதல் தாளைப்** (Drawing paper) பயன்படுத்துக. வேறு எந்தவொரு சித்திரத்தையோ பரும்படிக் குறிப்பையோ வரையத் தேவையில்லை.
- விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையளிக்கும்போது அது நன்கு உலர்ந்திருத்தல் முக்கியமானது. ஈரமான சித்திரங்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளமையினால், அது உமக்குப் பாதகமானதாக அமையலாம்.

## இயற்கைக் கற்றலும் அசையாப் பொருள்கூட்டச் சித்திரமும்

பின்வரும் அறிவுறுத்தல்களைக் கவனத்திற் கொண்டு உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள பொருள்தொகுதியை வரைந்து, வர்ணந்தீட்டுக.

※ கடதாசிப் பரப்பினைப் பொருத்தமானவாறு பயன்படுத்திச் சித்திர ஒழுங்கமைப்பினைச் செய்க.

※ பொருள்களின் இயல்பு, வெளிப்புறத் தன்மை, பரிமாணம், கண்மட்டம், முப்பரிமாண இயல்பு, தூரதரிசனக் கோட்பாடுகள் ஆகியன பற்றிக் கவனத்திற் கொள்க.

※ உமக்குத் தெரிகின்ற விதத்தில் பொருள்தொகுதியை வரைந்து அதன்மீது ஒளி, இருள் விழுகின்ற தன்மையைக் கவனத்திற் கொண்டு வர்ணந்தீட்டுக.

※ வர்ண ஊடகங்களைக் கையாளுகின்ற நுட்பமுறைகளைப் பொருத்தமானவாறு பயன்படுத்துக.

※ பொருள்தொகுதிக்குப் பொருத்தமான வர்ணப் பின்னணியைப் பயன்படுத்துக.

※ பொருள்தொகுதி வைக்கப்பட்டுள்ள ஆதாரப்பலகையின் அளவைப் பொருள்கூட்டத்திற்குப் பொருத்தமானதாக மாற்றிக்கொள்ள முடியும்.

※ நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், தூள் வர்ணம், பஸ்ரல் ஆகிய வர்ண ஊடகங்களுள் ஒன்றையோ சிலவற்றைக் கலந்தோ பயன்படுத்திக் கொள்ளலாம்.

※※※

[ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021(2022)

චිත්‍ර කලාව III
சித்திரக்கலை III
Art III

51 T III

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

✳ உமது **சுட்டெண்ணையும்** தெரிவுசெய்த **வினாவின் இலக்கத்தையும்** சித்திரம் வரையும் தாளின் **மறுபக்கத்தில்** தெளிவாக எழுதுக.

✳ நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், தூள் வர்ணம், பஸ்ரல் போன்ற வர்ண ஊடகம் ஒன்றையோ அல்லது ஊடகங்கள் சிலவற்றைக் கலந்தோ பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

✳ தேவைப்படுவோருக்குத் திசுத்தாள் வழங்கப்படும்.

✳ சித்திரத்தைக் கையளிக்கும்போது அது முழுமையாக உலர்ந்திருத்தல் முக்கியமாகும். ஈரமான சித்திரங்கள் ஒன்றுடனொன்று ஒட்டிக்கொள்வதற்கு வாய்ப்புள்ளமையினால் அது உமக்குப் பாதகமானதாக அமையலாம்.

● பின்வரும் **அ, ஆ, இ** ஆகிய பகுதிகளிலிருந்து **ஒரு** தலைப்பை மாத்திரம் தெரிவுசெய்து, **வர்ணச் சித்திரம்** ஒன்றை வரைக.

### பகுதி - அ : சித்திர ஒழுங்கமைப்பு

**1.** சூறாவளி காரணமாக கடல் அலையில் சிக்குண்டு தத்தளிக்கும் மீனவர் படகு

**2.** சமய சார்பான இரவுத் திருவிழா அல்லது ஊர்வலக் காட்சி

**3.** வைத்தியசாலையொன்றின் வெளி நோயாளர் பிரிவில் உள்ள ஒரு சந்தர்ப்பம்

**4.** தாவரங்கள் காணப்படும் குளக்கரை ஒன்றிற்கு வந்துள்ள விலங்குகளைப் பார்வையிடும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள்

### பகுதி - ஆ : அலங்கார ஆக்கம்

**5.** புடைவை அச்சிடலுக்குப் பயன்படுத்தத்தக்க பரவல் அலங்காரம் ஒன்றின் $9'' \times 9''$ அளவுப் பகுதியொன்றை பிராணிகளின் அரூப வடிவங்களைப் பயன்படுத்தி நிர்மாணிக்குக.

**6.** வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு விற்பனை செய்வதனை நோக்கமாகக் கொண்டு இலங்கைக்கே உரித்தான தனித்துவம் பேணப்படும் விதத்தில் நிர்மாணிக்கப்பட்ட பை (Bag) ஒன்றின் முன்பக்க அலங்காரத்திற்குப் பொருத்தமான அழகிய முழுத்தள அலங்காரமொன்றை நிர்மாணிக்குக.

**7.** இயற்கையின் வனப்பை வீட்டின் உள்ளகத்தில் ஏற்படுத்திக் கொள்வதற்காக $5' \times 10'$ அளவிலான வெளிக்குப் பொருத்தமான சுவர் செதுக்கல் திட்டமொன்றை அளவிடைக்குப் பொருத்தமான விதத்தில் வரைந்து பொருத்தமானவாறு வர்ணமிடுக.

### பகுதி - இ : கிறபிக் சித்திர ஆக்கம்

**8.** சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதன் மூலம் கொரோனா வைரஸைத் தோற்கடிக்க முடியும் என்பதனை சமூகத்திற்கு அறிவுறுத்தும் நோக்கில் கருத்துள்ள, அழகிய சுவரொட்டியொன்றை நிர்மாணிக்குக.

**9.** '2050 இல் செவ்வாய்க் கிரகம்' என்ற தலைப்பிலான நாவல் ஒன்றுக்கு மேலட்டையொன்றை வரைந்து வர்ணமிடுக. (முன்னட்டை, தடிப்பு (Spine), பின்னட்டை ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும்)

**10.** பெண்களுக்காக உள்நாட்டு மூலிகைகள் கலந்து தயாரிக்கப்படும் தலைமுடிக்குப் பயன்படுத்தும் எண்ணெய் போத்தல் ஒன்றை, சர்வதேச சந்தைக்குப் பொருத்தமான விதத்தில் பொதியிடக்கூடிய பெட்டியொன்றைத் திட்டமிட்டு வர்ணமிடுக.

* * *